www.tamilarangam.net

# கறுப்பு யூலை

1983 யூலையில் மனித நாகரீகமே வெட்கித் தலைகுனியும் வகையில் பேரினவாத சிறீலங்கா அரசின் பரிபூரண அனுசரனையுடன் தமிழ் மக்களுக்கெதிரான மிக மோசமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. பல உயிர்கள் பறிக்கப்பட்டன. தென்னிலங்கையில் வாழ்ந்த இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாக தாய்மண் நோக்கி வந்தனர்.

சிறீலங்கா அரசு நடத்திய மனிதப்படுகொலைகளின் மிக மோசமான அம்சமாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைத்துவைக்கப்பட்டிருந்த ஈழவிடுதலைப் போராளிகள் வெட்டியும், குத்தியும் கண்ட துண்டமாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

பத்து வருடங்களுக்கு முன்னர் எம்மினத்திற்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமையைப் பார்த்தும்கூட நாம் எமது விடுதலைப் பாதையை சரியாக வகுத்தோமா...? பொது எதிரியை இனம் கண்டு போராட்டத்தை முன்னேற்றினோமா...? என்றால் வரும் பதில் வருத்தத்திற்குரியதுதான்.

கடந்த பத்து வருடங்களிலே எத்தனை மனிதப் படுகொலைகள்? எதிரிகளால் மட்டுமல்ல, எம்மவர்களாலும் கூட!!!. ரெலோ இயக்கப் போராளிகள் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதும், உயிருடனேயே பலர் ரயர் போட்டு எரிக்கப்பட்டதும், ரெலோவின் தலைவர் கொல்லப்பட்டதும், மனிதப் படுகொலைகளின் இன்னுமொரு வடிவம்தான்.

இயக்கங்களைத் தடைசெய்கிறோம் என்ற பெயரில் EPRLF, PLOTE இயக்கப் போராளிகளின் மீது நடத்தப்பட்ட கொலை வெறியாட்டம், வெலிக்கடையை நிகர்த்த வகையில் நல்லூரில் அடைத்து வைக்கப்பட்ட 50க்கும் மேலான இதர இயக்கப் போராளிகளை 'அருணா' என்ற புலி இயக்க கொலைஞன் தனியனாய் தன்னியக்கத் துப்பாக்கியினால் சுட்டுக் கொன்று மறுநாள் அவ்வுடல்களை லொறியில் அள்ளி ஏற்றி அனுப்பியது மானிடத்தின் மீது வீழ்ந்த அடுத்த மரண அடி.

பேச்சுவார்த்தைக்கென்று போய் கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரை இப்படியொரு யூலை மாதத்தில் கொன்றது, இதற்கடுத்த வருடம் சென்னையில் EPRLF செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவையும் முன்னணி உறுப்பினர்கள் 12 பேரையும் கொன்றது, அதற்கு அடுத்த வருடம் இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தியைக் கொலை செய்து உலக அரங்கில் வெறுப்புக்குரிய இனமாக எம்மை மாற்றியது இவை அனைத்தும் தமிழ் பேசும் மக்களைத் தலை குனிய வைத்த கறுப்புச் சம்பவங்கள்.

83ல் தென்னிலங்கையில் இருந்து வடக்குக்கு அகதிகளாக தமிழ் மக்கள் வந்தனர். இன்றோ வடக்கிலிருந்து தெற்குக்கு தமிழ் மக்கள் அகதிகளாகப் போகின்றனர். அன்று வடக்கில் மாத்திரம் அகதி முகாம்கள். இன்று வடக்கு, தெற்கில் மாத்திரமல்ல உலகம் முழுவதுமே நாம் அகதிகள். அன்று மண்ணும் இருந்தது மக்களும் இருந்தனர், இன்று மண்ணுமில்லை மக்களுமில்லை. அரசின் கொடுமைகளும் புலிகளின் சர்வாதிகாரமும் எஞ்சியிருக்கின்ற மக்களையும் நவீன உலகின் காற்றுப்படாத கற்காலத்திலேயே வைத்திருக்கிறது.

மக்கள் மீது விதிக்கப்படும் இந்த அடக்குமுறைகளை அவர்களைச் சூழ்ந்துள்ள இந்த சோகங்களை தகர்க்க அனைவரும் இணைந்து முயல்வோம்.

**கறுப்பு யூலை என்பது அஞ்சலிக்காக மட்டுமல்ல சிந்தனைக்காவும் கூட ....!**

சர்வதேசக் கிளைகளின் ஒன்றியம்
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
**EPRLF**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்